சென்னை கிழக்கு மாவட்டம், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில்

# போட்டியிடும் கழக வேட்பாளர்களை ஆதரித்து விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி. பிரச்சார விவரம்!



**மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!**

| நாள் 18.4.2026 சனிக்கிழமை | பொருள் | இடம் |
|---|---|---|
| மாலை 4.00 மணி | அம்பத்தூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் அ.பு.பூர்ணிமா அவர்களை ஆதரித்து வாக்குசேகரிப்பு | யாதவா தெரு, பாடி அம்பத்தூர் தெற்கு பகுதி |
| மாலை 4.45 மணி | வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் திரு.கார்த்திக் மோகன் அவர்களை ஆதரித்து வாக்குசேகரிப்பு | ராஜமங்கலம் அம்பேத்கர் சிலை அருகில் வில்லிவாக்கம் மேற்கு பகுதி |
| மாலை 5.30 மணி | கொளத்தூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் கழகத்தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை ஆதரித்து வாக்குசேகரிப்பு | ரமணா நகர் கொளத்தூர் கிழக்கு பகுதி |
| மாலை 6.15 மணி | திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் திரு.கே.எஸ்.ரவிச்சந்திரன் அவர்களை ஆதரித்து வாக்குசேகரிப்பு | M.S.முத்துநகர், கன்னிகாபுரம் திரு.வி.க.நகர் வடக்கு பகுதி |
| மாலை 7.00 மணி | எழும்பூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் திரு.தமிழன் பிரசன்னா அவர்களை ஆதரித்து வாக்குசேகரிப்பு | அம்பேத்கர் திடல், சேத்துப்பட்டு எழும்பூர் தெற்கு பகுதி |
| மாலை 7.45 மணி | துறைமுகம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்களை ஆதரித்து வாக்குசேகரிப்பு | வால்டாக்ஸ் சாலை, திருப்பள்ளி தெரு துறைமுகம் மேற்கு பகுதி |

மேற்கண்ட பிரச்சார கூட்டங்களில் அந்தந்த பகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகள், தோழமைக்கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

சென்னை கிழக்கு மாவட்டம், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில்

# துறைமுகம், எழும்பூர், திரு.வி.க.நகர், அம்பத்தூர் ஆகிய தொகுதிகளில் அமைச்சர் - செயலாளர் - பி.கே.சேகர்பாபு, கழக மாற்றுத்திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் டி.எம்.என்.தீபக்நாதன், கானா பாடகர் இசைவாணி ஆகியோர் பிரச்சார விவரங்கள்!



**மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!**

| நாள் 18.4.2026 சனிக்கிழமை | பொருள் | இடம் |
|---|---|---|
| காலை 7.30 மணி | துறைமுகம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் 55, 56அ, 55ஆ, 54அ, 54ஆ வட்டங்களில் விடுபட்ட இடங்களில் வாக்குசேகரிப்பு | மின்ட் பேருந்துநிலையம் அருகில் உள்ள காவலர் குடியிருப்பு துறைமுகம் கிழக்கு/ மேற்கு பகுதி |
| காலை 10.30 மணி | ஆட்டோ ஓட்டுநர்களுடன் கலந்துரையாடல் | குளோப் திருமண மாளிகை ஏழுகிணறு, துறைமுகம் கிழக்கு பகுதி |
| மாலை 5.00 மணி | சாலையோர வியாபாரிகளிடம் கலந்துரையாடல் | எண்.14, வால்டக்ஸ் ரோடு துறைமுகம் மேற்கு பகுதி |
| **கழக மாற்றுத்திறனாளிகள் அணிச்செயலாளர் பேராசிரியர் டிஎம்.என்.தீபக்நாதன் அவர்கள் வாக்குசேகரிப்பு** | | |
| காலை 9.00 மணி | துறைமுகம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்களை ஆதரித்து வாக்கு சேகரிப்பு | சத்யாநகர் மேற்கு துறைமுகம் கிழக்கு பகுதி |
| காலை 10.00 மணி | | அண்ணாபிள்ளை தெரு வரதாமுத்தையா தெரு சந்திப்பு துறைமுகம் மேற்கு பகுதி |
| காலை 11.00 மணி | திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் திரு.கே.எஸ்.ரவிச்சந்திரன் அவர்களை ஆதரித்து வாக்கு சேகரிப்பு | ஈடன் கார்டன் திரு.வி.க.நகர் வடக்கு பகுதி |
| காலை 12.00 மணி | | பராக்கா சாலை, நம்மாழ்வார்பேட்டை திரு.வி.க.நகர் வடக்கு பகுதி |
| மாலை 5.00 மணி | எழும்பூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் திரு.தமிழன் பிரசன்னா அவர்களை ஆதரித்து ஆதரித்து வாக்கு சேகரிப்பு | வீராசாமி தெரு, எழும்பூர் தெற்கு பகுதி |
| மாலை 6.00 மணி | | சுந்தராபுரம், புளியந்தோப்பு எழும்பூர் வடக்கு பகுதி |
| **கானா பாடகர் இசைவாணி அவர்கள் வாக்குசேகரிப்பு** | | |
| மாலை 3.00 மணி முதல் | அம்பத்தூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் மருத்துவர் அ.பு.பூர்ணிமா அவர்களை ஆதரித்து வாக்கு சேகரிப்பு | 1. பாடி யாதவாள் தெரு, 2. வீரமாமுனி சாலை, முகப்பேர் 3. ICF காலனி, அத்திப்பட்ட 4.தந்தை பெரியார் நகர், ஐந்து விளக்கு, கொரட்டூர். 5. கொரட்டூர் பஸ் ஸ்டாண்ட்அருகில் |

மேற்கண்ட வாக்கு சேகரிப்பிலும், பிரச்சார கூட்டங்களிலும் அந்தந்த பகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகள், தோழமைக்கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

# எல்லா மக்களையும் பாதுகாக்கின்ற ஆட்சி தி.மு.க. ஆட்சி !

## செஞ்சி தொகுதியில் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி பேச்சு!

செஞ்சி, ஏப் 18–

செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் தேர்தல் பரபரப்பு உச்சத்தை எட்டியுள்ள நிலையில், திராவிடர் கழகத்தின் தலைவர் கி. வீரமணி, செஞ்சி தொகுதி திமுகவேட்பாளர் செஞ்சிமஸ்தானை ஆதரித்து நடத்திய பிரச்சாரம் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது.

நகரின் முக்கிய பகுதியான செஞ்சி விழுப்புரம் சாலையில் நடைபெற்ற இந்த வாக்கு சேகரிப்பு பிரச்சாரத்தில் மக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டுதிமுக வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏவிற்கு வரவேற்பு அளித்தனர்.



இளைஞர்கள், பெண்கள் மற்றும் முதியோர் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் கலந்துகொண்டனர்.

பிரச்சாரத்தின் போது உரையாற்றிய கி.வீரமணி, சமூகநீதி, மாநில உரிமைகள் மற்றும் அரசியல் நிலைப்பாடுகள் குறித்து பேசினார். மேலும், தமிழ்நாட்டையும் தமிழ்நாட்டு மக்களையும் வஞ்சித்து பாஜக – அதிமுக கூட்டணி செய்யும் துரோகத்தையும் எடுத்துரைத்து மக்களின் ஆதரவை திரட்ட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

செஞ்சி தொகுதி திமுக வேட்பாளர் செஞ்சிமஸ்தான் மக்களின் நம்பிக்கைக்கு இணையாக செயல்பட்டு, தொகுதி வளர்ச்சிக் காகவும் மக்களின் வளர்ச்சிக்காகவும் பாடுபடுவதாகதெரிவித்த அவர்திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கொள்கை கூட்டணி என்றும் எல்லா மக்களையும் பாதுகாக்கின்ற ஆட்சி தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் உரிமைக்காக கருப்பு கொடி ஏற்றினோம் சிறுபான்மை மக்கள் நாட்டில் வாழ வேண்டும் ஆனால் அவர்களுடைய வாழ்க்கை மிகப்பெரிய கொடுமைக்கு உரிய ஆட்சியாக ஒன்றிய ஆட்சி உள்ளது. இன்றைக்கு குடியுரிமையை பதித்துக் கொண்டனர் முழுக்க முழுக்க மத கலவரத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு திருப்ப ரங்குன்றத்தை பாஜகவினர் கையில் எடுத்துள்ளனர்.

பாஜக தேர்தல் அறிக்கையில் சிறுபான்மை இன மக்களுக்கு ஒரு அறிக்கை கூட இல்லை ஆனால் சிறுபான்மையின மக்களுக்கு எல்லா உரிமைகளை பாதுகாக்கின்ற ஆட்சி ஸ்டாலின் ஆட்சி ஆர்.எஸ்.எஸ் கொள்கை ஜாதியை காப்பாற்ற வேண்டும் அரசியலில் மாநிலங்களே இருக்கக் கூடாது என்ற நிலையை உருவாக்க வேண்டும் மகளிர்களுக்கு இட ஒதுக்கீடு என்ற ஒரு பெயரில் முகமூடி போட்டுக் கொண்டு அவசரம் என்று கூறுகின்றனர்.

தமிழ்நாடு உள்ளிட்ட மேற்கு வங்கத்தில் 23ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில் பிரச்சாரம் நடைபெற்று வருகிறது இதை பற்றி கவலைப்படாமல் ஆர்எஸ்எஸ் ,பிஜேபி மோடி அரசு திடீரென தொகுதி மறு வரையறை என்ற சூழ்ச்சியை உண்டாக்கி உள்ளனர் அதனால்தான் கருப்புக் கொடி ஏற்றி சட்ட மசோதா நகலை எரித்துள்ளோம்இபிஎஸ் தலைமையிலான அதிமுக இன்றைக்கு லேடியாகவும் மோடியாகவும் இல்லாமல் ஓடியாக உள்ளது. சாதனையின் மேல் சாதனை செய்து கொண்டு இருப்பவர்தான் முதலமைச்சர் ஸ்டாலின்.4 தேதி ஸ்டாலின் ஆட்சிக்கு வருவது உறுதி செஞ்சி மஸ்தான் சட்டமன்றம் செல்வது உறுதி அப்போது மகளிர் உரிமைத் தொகை 1000 அல்ல 2000 கிடைப்பது உறுதி டெல்லியில் இருந்து வரக்கூடியவர்கள் அவர்களுக்கு அடிமை சாசனம் எழுதிக் கொடுத்தவர்கள் உங்களுக்கு வரக்கூடிய 1000 ரூபாயை தடுக்க நீதிமன்றம் சென்றனர் ஆனால் அதனை முறியடித்து 2000 அல்ல கோடை உதவித்தொகை என்று 3000 ரூபாயையும் சேர்த்து கொடுத்தது தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

இது மட்டுமல்ல திமுக தேர்தல் அறிக்கையில் கூறியுள்ள அனைத்து திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு வாக்காளர்களாகிய நீங்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்திற்கு பெருவறையான வாக்குகள் அளித்து செஞ்சி தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் அவர் கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில் முன்னாள் மத்திய இணை அமைச்சர் செஞ்சி ராமச்சந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், கூட்டணி கட்சி நிர்வாகிகள் ரங்க பூபதி, தயாநிதி, சிவா, பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்,திராவிடர் கழக நிர்வாகிகள், திமுக, தோழமைக் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்டோ கலந்து கொண்டனர்.

மேல்மலையனூர் ஒன்றியத்தில் வாக்கு சேகரிப்பு:

முன்னதாக செஞ்சி தொகுதி திமுக வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏமேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் தலைமையில் ஒன்றிய செயலாளர்கள் ,சாந்தி சுப்பிரமணியன், நாராயணமூர்த்தி ஆகியோர் முன்னிலையில்

மேல்மலையனூர் மேற்கு ஒன்றியம் எய்யில், மேல்செவளாம்பாடி, நந்திரபுரம், ஆன பள்ளம், தேப்பிரம்பட்டு, பெரியநொளம்பை, சின்ன நொளம்பை பரிதிபுரம்ஆகிய கிராமங்க ளில் வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார்.

வாக்கு சேகரிக்க சென்ற திமுக வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ விற்கு அனைத்து இடங்களிலும் பெண்கள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

‘நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், மாவட்ட கவுன்சிலர் செல்விராம சரவணன்காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் மண்ணாங்கட்டி அரி, சரவணன், சண்முகம், மதிமுக நிர்வாகிகள் பின்னலூ ர்ஏழுமலை, தேமுதிக நிர்வாகிகள் சின்னதுரை, செங்குட்டுவன், விசிக மாவட்ட செயலாளர் சிவா, மழைமேனி பாண்டியன், திமுகஒன்றிய நிர்வாகிகள் உதயகுமார், ரவிச்சந்திரன், அர்ஷத், தாஹிராஅப்துல் வகாப்,சரவணன், எஸ். பி .சம்பத், சக்தி,தமிழரசி பாண்டியன், பெருமாள்,காந்திமதி,ஒன்றிய இளைஞரின் அமைப்பாளர்மணி கண்டன், துணை அமைப்பாளர் சக்திவாசன்,ஒன்றிய ஆதிதிராவிடர் நல அணி அமைப்பாளர் சத்யராஜ், உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் தோழமைக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ஆவடி சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளர் ஆவடி சா.மு.நாசர் வாக்குசேகரிப்பு!



## சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026

**தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி சார்பில் எண்.06, ஆவடி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் ஆவடி சா.மு.நாசர் வாக்குச் சேகரிக்கும் நிகழ்ச்சி விவரம்.**

**தேதி : 18.04.2026 (சனிக்கிழமை)**

| வாக்குசேகரிக்கும் நேரம்/ இடம் | வட்ட கழகச் செயலாளர்கள் | ஏற்பாடு |
|---|---|---|
| காலை 11.00 மணி பொன்னேரி பொதுக்கூட்டம் இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர் திரு.ராகுல் காந்தி வருகை | | |
| மாலை 4 மணி திருவேற்காடு நகரம் வார்டு எண்கள்: 8, 16, 18, 17, 9, 15 & 14 | ரங்கதுரை, சாது, ஜெகன், உமாபதி, பரிசமுத்து, பன்னீர்செல்வம், காந்தி | என்.இ.கே.மூர்த்தி (நகர செயலாளர்) |

தேர்தல் பணிக்குழு - **ஆவடி சட்டமன்றத் தொகுதி**



திருத்தணி சட்டமன்ற தொகுதி தே.மு.தி.க வேட்பாளர் டி.கிருஷ்ணமூர்த்தி, ஆதரித்து, திருத்தணி ஜும்மா மசூதியில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் இஸ்லாமிய மக்களிடம் திராவிட மாடன் அரசியல் செய்த சாதனைகளை எடுத்துக்கூறி வாக்கு சேகரித்தனர். இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி தே.மு.தி.க தொகுதி பார்வையாளர் நிஜாமுதீன், திருத்தணி நகர செயலாளர் வி.வினோத் குமார் மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள், நகர நிர்வாகிகள்,மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், நகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



புழல் 24வது வட்டம் பாகம் எண் 285, 287 ஆகிய வார்டுகளில் வட்டக் கழகச் செயலாளர் கே.பி.சுந்தரேசன் தலைமையில் வெற்றி வேட்பாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வீடுவீடாக சென்று கூட்டணி கட்சி தொழர்களோடு வாக்கு சேகரித்தனார்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் எல்லாப்புரம் மத்திய ஒன்றியம் தாமரைப்பாக்கம் ஊராட்சி மன்ற அ.தி.மு.க. முன்னாள் தலைவர் வெங்கடேசன் தலைமையில் 200க்கும் மேற்பட்டோர் அக்கட்சிலிருந்து விலகி ஒன்றிய கழகச் செயலாளர் தங்கம் முரளி ஏற்பாட்டில் பூவிருந்தவல்லி தொகுதி வேட்பாளர் ஆ.கிருஷ்ணசாமி முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார்கள். உடன் தொகுதி பார்வையாளர் பி.டி.சி. செல்வராஜ், ஒன்றிய பார்வையாளர் எஸ். ஜெயபாலன், நிர்வாகிகள் கோடுவெளி எம்.குமார், பி.ஜி. முனுசாமி, தாமரைப்பாக்கம் டி.பாஸ்கர், வெங்கல் ஜி. பாஸ்கர், கே.ஜி. அன்பு, உமா சீனிவாசன், சுப்பிரமணி, காரணி சத்யா , வேலன், காஞ்சனா முனுசாமி, உள்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்கள்.



ஆர்.கே.நகர் தொகுதி சென்னை வடக்கு மாவட்ட மீனவர் அணி தலைவர் எஸ்.கே. இளங்கோ தலைமையில் சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுனர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் நா.செல்வராஜ் முன்னிலையில் பாகம் 129 130 மற்றும் பி.எல். 2 கௌசல்யா, பழனி, பி.எல். 2 மற்றும் கழக தோழர்களுடன் மகளிர் நிர்வாகிகள் வாக்கு சேகரித்தனர்.



திருவொற்றியூர் தொகுதி கம்யூனிஸ்ட் வேட்பாளர் எல்.சுந்தர்ராஜை ஆதரித்து சென்னை வடகிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர் தி.சாரதி பாலாஜி திருவொற்றியூர் கிழக்கு பகுதி, 10வது வார்டு அண்ணா காலனி பகுதியில் வாக்கு சேகரித்தார்.உடன் தகவல் தொழில்நுட்ப அணி கிழக்கு பகுதி அமைப்பாளர் எல். விக்னேஷ்,மகளிர் அணி பகுதி துணை அமைப்பாளர் சாந்தி உள்ளிட்ட கழகத்தினர் வாக்கு சேகரித்தினர்.